# 1

# “கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ?”

எரேமியா, சிதேக்கியா அரசரின் வேண்டுகோளின்படி சிறையில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்டார். சிதேக்கியா உண்மையில் கர்த்தருடைய வசனத்தைக் கேட்க ஆர்வம் இல்லாதவராக இருந்த போதிலும், அவர் பாபிலோனியருடைய கைகளில் யூதாவின் முடிவு பற்றி தீர்க்கதரிசி என்ன கூறுவார் என்பதைக் குறித்து அறிய ஆவலுடன் இருந்தார். சிதேக்கியா அரசர் எரேமியாவினிடத்தில், “கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ?” என்று கேட்டார் (எரேமியா 37:17அ). அது நாம் தேவனை ஆராதிக்க நாடும் எப்பொழுதிலும் கேட்கத் தகுதியான கேள்வியாக உள்ளது. இருப்பினும், சிதேக்கிய அரசரைப்போலின்றி, நாம் எதை அறிவதற்கு நாடிக்கொண்டிருப்பினும், “கர்த்தரால் வரும் வார்த்தை”யைப் பற்றி நாம் கவனித்துக் கேட்கும்போது முழு ஆர்வத்துடன் கேட்க வேண்டும். நாம் தேவனை ஆராதனையில் அணுகுமுறையில் அவர் நமக்கு அதைப்பற்றி அறிவுறுத்தல்கள் ஏதேனும் கொண்டுள்ளாரா?

ஆல்ஃபிரெட் P. கிப்ஸ் என்பவர், ஆராதனை அமைந்துள்ள மாதிரிகள் என்ற வகையில், இரு ஏற்பாடுகளிலும் இருந்து பல உதாரணங்களைக் குறிப்பிட்டார்.[1] இந்தப் படிப்பில் கிப்ஸின் உட்கண்ணோக்கத்தைப் பல பாடங்களில் இருந்து, நாம் தரவழைத்து இந்த உதாரணங்களில் இரண்டின்மீது கவனம் குவிப்போம்: அவற்றில் ஒன்று பழைய ஏற்பாட்டில் இருந்தும் இன்னொன்று புதிய ஏற்பாட்டில் இருந்தும் வருவதாயிருக்கும். இவைகளுக்கிடையில் உள்ள குறிப்பிடத்தக்க ஒற்றுமைத்தன்மை, ஆராதனையில் தேவன் விரும்புவது என்ன என்பதை பிரதியெடுத்தாற் போன்று வெளிப்படுத்துதல் ஆகியவற்றினால் இவைகள் தேர்ந்துகொள்ளப் பட்டுள்ளன.

இவற்றில் ஒன்று தேவன் ஆபிரகாமை மோரியா மலையில் ஈசாக்கைப் பலியிடும்படி அழைத்தபோது, ஆபிரகாமினால் அளிக்கப்பட்ட ஆராதனையாக உள்ளது (ஆதியாகமம் 22). இன்னொன்று புதிதாகப் பிறந்திருந்த அரசரான, இயேசுவை ஆராதிக்கக் கிழக்கில் இருந்து வந்த ஞானிகளின் ஆராதனையாக உள்ளது (மத்தேயு 2). இவ்விரண்டில் எதுவும் ஆராதனைக்கென்று சபைகூடுகைக்கான உதாரணமாக இருப்பதில்லை என்று ஒத்துக்கொண்டாக வேண்டும், இருப்பினும் இவையிரண்டுமே, மனிதர்கள் தேவனிடத்தில் இருந்து வெளிப்படையான அறிவுறுத்தல் களைப் பெற்றுக்கொண்டபோது, அவர்கள் எவ்வாறு ஆராதித்தனர்

என்பதற்கான உட்கண்ணோக்குகளைக் கொண்டுள்ளன. உண்மையான ஆராதனை என்பது எங்கே நடந்திருப்பினும், அவற்றில் குறிப்பிட்ட சில பண்புகள் காணப்படுகின்றன.

இந்த இரண்டு உதாரணங்களும் தேவனுடைய அறிவுறுத்தலினால் தூண்டப்பட்டிருந்தன என்பது இவற்றின் முதலாவது பண்பாகும். ஆபிரகாமுக்குத் தேவன் குறிப்பிட்ட அறிவுறுத்துதலைக் கொடுக்காதிருந்தால், அவர் மோரியா மலைக்குச் செல்லுவதற்குக் காரணம் எதையும் கொண்டிருக்க மாட்டார் (ஆதியாகமம் 22:2). ஞானிகளுக்குத் தேவன் வழிகாட்டும் நட்சத்திரம் ஒன்றைக் கொடுக்காதிருந்தால், அவர்கள் இயேசு பிறந்த இடமான பெத்லகேமை நோக்கி, நீண்ட பயணம் செய்திருக்க மாட்டார்கள் (மத்தேயு 2:2). அவர்கள் நட்சத்திரத்தைப் பின்பற்ற வேண்டும் என்று எவ்வாறு அறிந்தனர் என்ற குறிப்புகளையோ அல்லது அது அவர்களை இயேசு பிறந்த இடத்திற்கு வழிநடத்தியது என்பதை அவர்கள் எவ்வாறு அறிந்தனர் என்பதற்கான குறிப்புகளையோ நாம் அறிவதில்லை. அவர்களை வழிநடத்தத் தேவன் அந்த நட்சத்திரத்தைப் பயன்படுத்தினார் என்று மாத்திரம் நாம் அறிகிறோம். அந்த நட்சத்திரத்தைப் பற்றி நாம் வேறெதையும் முடிவுசெய்தாலும், பின்வரும் ஒரு உண்மை மாத்திரமே தெளிவாக உள்ளது: அது தெய்வீக வழிநடத்துதலைக் குறித்தது.

இவ்விரண்டு உதாரணங்களும், தேவனுடைய அறிவுறுத்துதலுக்கு விசுவாசத்துடன் பதில்செயல் செய்தலாக இருந்தது என்பது இவற்றின் இரண்டாவது பண்பாக உள்ளது. ஆபிரகாம் கேள்வியோ அல்லது தயக்கமோயின்றி கீழ்ப்படியும்படி செயல்படத் தொடங்கினார். அவர் அடுத்தநாள் அதிகாலையில் எழுந்து, தமது கழுதைக்குச் சேணமிட்டு, விறகைப் பிளந்துகொண்டு புறப்பட்டார். பின்பு அவர் தம்முடன் வருவதற்கென்று இரண்டு வேலைக்காரர்களை எழுப்பி, ஈசாக்கைப் படுக்கையில் இருந்து எழும்பச் செய்து, மோரியா இருக்கும் திசைநோக்கிப் பயணமானார்.

கர்த்தருடைய வசனத்தின்படி, நாம் இவற்றையும் மற்றும் ஆராதனையின் பிறபண்புகளையும் இன்னும் நெருக்கமாகக் கண்ணோக்குவோம்.

## ஆராதனை என்பது தேவனால் வழிநடத்தப்படுகிறது

தேவன் மனிதருக்குக் கொடுத்த தொடக்ககால அறிவுறுத்துதல்களின் மத்தியில், ஆராதனையைப் பற்றிய வழிகாட்டுக் குறிப்புகளும் இருந்தன (ஆதியாகமம் 4:3-8; எபிரெயர் 11:4). முதல் கொலையானது, ஆராதனைக்கு தேவன் கொடுத்திருந்த அறிவுறுத்துதல்களை, காயீன் பின்பற்றத் தவறியதால் ஏற்பட்ட அவரது [காயீனுடைய] கோபத்தினால் தூண்டப்பட்டதாக இருந்தது. வேதாகமத்தின் முழு வரலாறுமே, மனிதனைத் தேவன் தம்முடன் ஒன்றித்திருக்கச் செய்வதற்குத் தேவனுடைய முன்முயற்சியின் வெளிப்படுத்துதலாக உள்ளது; அது மனிதர் அந்த முன்முயற்சிக்கு எவ்வாறு பதில் செயல் செய்துள்ளார் என்று காண்பிக்கிறது. நாம் ஏறக்குறைய எப்போதுமே,

ஆராதனையில் தேவனால்-தரப்பட்ட ஆணையின் நிபந்தனைகளுக்குத் தக்கவகையிலான பதில்செயல் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகத்திலும் ஆராதனை பற்றிய தகவல் மற்றும்/அல்லது அறிவுறுத்துதல் அடங்கியுள்ளது.

பாரம்பரியமோ அல்லது தனிப்பட்ட முன்னுரிமையோ நமது வழிகாட்டும் நட்சத்திரமாக இருக்க இயலாது, அல்லது நாம் நல்லதென்று உணரச்செய்யும் விஷயங்களினால் நாம் வழிநடத்தப்பட இயலாது. நாம் எவ்வாறு உணரவேண்டும் என்று தேவன் ஒருக்காலும் நமக்குக் கூறியதில்லை. அவர் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று நமக்குக் கூறுகிறார். ஆராதனையில் என்ன நடைபெற வேண்டும் என்பதற்கு, உணருதல் என்பது நல்லதொரு குறிப்பாக இருப்பதில்லை. உணருதல் என்பது ஒரு நபரில் இருந்து இன்னொரு நபருக்கு மிகவும் வேறுபடுகிறது. ஒருவரை மன எழுச்சியடையச் செய்யும் ஒருவிஷயம் இன்னொருவரை வெறுப்புறச் செய்யலாம். உணர்வுகள் தெய்வீகத்தினால் இயக்கப்படும் செயல்பாட்டைப் பின்பற்றுகின்றன. ஆராதனை என்பது உணர்வின் உச்சக்கட்டமாக மாத்திரம் இருப்பதில்லை. அது மூளையின் ஒரு பயிற்சி யாக மாத்திரம் இருப்பதும் இல்லை. உண்மையான ஆராதனை என்பது நமது இருப்பின் - சரீரம், ஆத்துமா, மற்றும் ஆவி என்ற ஒவ்வொரு அமைப்பையும் அடைகிறது. அது நம்மைக் கைப்பற்றிக்கொள்கிறது, நமது முழுமையையும் அது பற்றிக்கொண்டு, தேவனுடைய மகிமை என்ற ஒளிக்கதிரில் நாம் குளிர்காயும்படி நம்மை சர்வவல்லவரின் பிரசன்னத் திற்குள் கொண்டு சேர்க்கிறது.

## ஆராதனை என்பது கீழ்ப்படிதல் உள்ள இருதயத்தில் இருந்து உதிக்கிறது

தேவனுடைய மக்களின் சார்பாக ஆசாரியர்கள் செய்த அன்றாட ஊழியத்திற்கு வழிகாட்டும் குறிப்புகளை நிலைநாட்டுவதற்காக லேவியராகமம் என்ற புத்தகம் பதிவுசெய்யப்பட்டது. ஆசாரியர்கள் பரிசுத்தமற்ற மக்களுக்கும் பரிசுத்தமான தேவனுக்கும் இடையில் மத்தியஸ்த ஊழியம் செய்கையில், அவர்கள் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளுதல்மீது மாபெரும் வலியுறுத்தம் வைக்கப்பட்டிருந்தது. லேவியராகமம் என்ற புத்தகம், பெரும்பான்மையான மக்களுக்கு வாசிக்க சுலபமானதாகவோ அல்லது ஆர்வமுள்ளதாகவோ இருப்பதில்லை. சாதாரண வாசகருக்கு, பழைய ஏற்பாட்டின் இந்தப் புத்தகம், இன்றைய நாட்களின் மக்களுக்குப் பொருத்தமற்றதாகவும் தொடுகைக்கு வெளியே இருப்பதாகவும் காணப்படலாம்; இருப்பினும் லேவியராகமம் என்ற இப்புத்தகம் கூறுகிற விஷயமானது, எந்தத் தலைமுறையிலும் தேவனு டைய மக்கள் இருக்க வேண்டிய முறையின் மையமாகவே உள்ளது. இது தேவனை அணுகுதல் பற்றிய, தேவனுடன் தொடர்புகொண்டிருத்தல் பற்றிய, மற்றும் அவருடன் ஒரு பரிசுத்த பிரசன்னத்தைப் பராமரித்தல் பற்றியதாக உள்ளது. தேவனை அணுகுதல் என்பது மிகவும் கவலைக்குரிய

காரியமாய் இருக்கிறது, இது மனிதனுக்குக் கொடுக்கப்பட்டதிலேயே பெரிய சிலாக்கியமாய் இருக்கிறது. நாம் அவரை அணுகுவதை ஒருக்காலும் இலகுவில் எடுத்துக் கொள்ளக்கூடாது, மற்றும் நாம் நமது சொந்த நிபந்தனைகளின்பேரில் அவ்வாறு செய்ய முயற்சிக்கக் கூடாது.

ஆசாரியத்துவத்தின் விரிவான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு மத்தியில், ஆசாரியர்கள் தங்களது ஊழியத்தின் முதல் நாளை எவ்வாறு தொடங்கினர் என்பது பற்றிய வரலாற்றைக் கூறுவதற்குத் தேவன் நேரம் எடுத்துக்கொண்டார் (லேவியராகமம் 9:8-24). ஒரு நாளின் பல்வேறு பலிசெலுத்துதலின் முடிவில், "கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, ... சர்வாங்கதகனபலியையும் ... எரித்துவிட்டது; ஜனங்களெல் லாரும் அதைக் கண்டபோது ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள்" (லேவியராகமம் 9:24). அடுத்து வரும் நிகழ்ச்சியானது சந்தோஷம் மற்றும் கொண்டாட்டம் ஆகியவற்றின் நாள் ஒன்றை புலம்புதலின் நாளாக்கியது. இவ்வரலாறு இருவசனங்களில் மாத்திரம் கூறப்பட்டுள்ளது, ஆனால் அதன் தெளிவான புத்திமதி விரைவில் மறக்கப்படாததாக உள்ளது. ஆரோனின் இரு மகன்களான நாதாப், அபியூ என்பவர்கள், ஆரோனுக்குப் பகல் வேளையில் பலிசெலுத்துதல்கள் யாவற்றிலும் உதவிக்கொண்டிருந்தனர், இவர்கள் தேவனுடைய அறிவுறுத்துதலுக்கு ஏற்றவாறு இல்லாதிருந்த ஒரு பலிப்பொருளுடன் தேவனை அணுக முயற்சி செய்தனர் (லேவியராகமம் 10:1, 2). பலிபீடத்தின் மீதிருந்து பலிப்பொருட்களைப் பட்சிக்கத் தேவனிடத்தில் இருந்து புறப்பட்டிருந்த அதே அக்கினியானது, நாதாப், அபியூ என்பவர்களைப் பட்சித்தது, "அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்." அவர்கள் செலுத்திய அக்கினி "அந்நியமாக," அல்லது "தீட்டானதாக" இருந்தது. தேவனுக்கு ஆராதனை செய்வதில் பயன் படுத்தப்பட வேண்டிய அக்கினியைப் பற்றித் தேவன் குறிப்பான அறிவுறுத்தல்களைக் கொடுத்திருந்தார். அவர்கள் அந்த அறிவுறுத்தல் களைப் பின்பற்றவில்லை. ஒரு விளக்கவுரையாளர், "புதிதாக - அபிஷேகம் பெற்றிருந்த அந்த ஆசாரியர்கள், - என்னதான் நல்ல நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், தேவன் கட்டளையிடாதவற்றைச் செய்திருந்தனர், மற்றும் அதைச் செய்திருந்ததால், அவர் தடைசெய்திருந்ததைச் செய் திருந்தனர்"[2] என்று கூறினார். இன்னொருவர், "தேவன் இஸ்ரவேல் மக்களுக்கும் எதிர்கால சந்ததிகள் எல்லாருக்கும், தம்மைத் தமது சொந்த நிபந்தனைகளின்படியே ஆராதிக்க வேண்டும் என்பதற்கு வல்லமையான கூற்றை ஏற்படுத்தினார்"[3] என்று கூறினார். இம்மனிதர்கள் யூகத்துவத்தின் அடிப்படையில் செயல்பட்டிருந்தனர். அவ்வாறு செய்வது சுலபமாக உள்ளது. எல்லா வேளைகளிலும் நாம் தேவன் விரும்புகிறதுபோலவே மிகச்சரியாகச் செய்கிறோம் என்று நினைத்துக்கொண்டே நாம் யூகத்துவத்தின் அடிப்படையில் செயல்பட முடியும். தேவன் பேசியிருந்தால், அதை உற்றுக் கவனிக்க நாம் தயாராக இருக்க வேண்டும் என்பது தெளிவான சத்தியமாக உள்ளது. தெய்வீக வெளிப்படுத்துதலுக்குக் கீழ்ப்படிதல் உள்ள பதில்செயலாக இருக்கும்போது மாத்திரமே ஆராதனை செல்லத்தக்கதாக உள்ளது.

ஆராதனை என்பது வடிவத்தைவிட அதிகமானதாக இருக்கையில், நாம் பின்பற்றுவதற்குத் தேவன் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களைக் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் மறவாதிருக்க வேண்டும். உடன்படிக்கைப் பேழையுடன் இஸ்ரவேல் மக்களின் அனுபவமானது இந்த சத்தியத்திற்கு விரிவான விவரிப்பை அறிவிக்கிறது. ஆசரிப்புக்கூடாரமும் அதனுள் இருந்த பொருட்களும் ஆராதனையில் பயன்படுத்தப்பட்டன. உடன்படிக்கையின் பெட்டி/பேழை என்பது தேவனுடைய பிரசன்னத்தை மிகவும் குறிக்கும் பொருளாக இருந்தது. அந்தப் பேழையின் மேல்பகுதியில் இருந்த கிருபாசனத்தின் மீது அமையப் பெற்றிருந்த கேரூபின்களுக்கு மத்தியில் தேவன் வாசம்பண்ணினார். ஏலி ஆசாரியராக இருந்தபோது, பெலிஸ்தர்கள் இந்தப் பேழையைக் கைப்பற்றினர்; ஆனால் அந்தப் பேழை வைக்கப்பட்ட இடங்களில் எல்லாம் அப்பகுதியில் இருந்த பெலிஸ்த ஜனங்கள் சபிக்கப்பட்டதால், அவர்கள் அதை விரைவிலேயே திருப்பி அனுப்பி விட்டனர். பெலிஸ்தரிடத்தில் இந்தப்பேழை ஏழு மாதங்கள் மாத்திரமே இருந்தது. அதை மீண்டும் இஸ்ரவேல் நாட்டிற்கு அனுப்புவது எப்படி என்று அறிந்திராத பெலிஸ்த ஆசாரியர்கள் மற்றும் தேவவிற்பன்னர்கள், ஒரு புது இரதத்தைக் கட்டத் தீர்மானித்தனர். இந்த இரதத்தின்மீது, அவர்கள் பேழையையும், அத்துடன் பொன்னால் ஆன பரிசுப்பொருட்களையும் வைப்பார்கள். அவர்கள் அந்த இரதத்தில், இதற்கு முன் நுகத்தில் பூட்டப்பட்டிராத பால் தரும் பசுமாடுகள் இரண்டைப் பிணைத்து, பின்பு அவற்றின் கன்றுகளை அவற்றிடம் இருந்து பிரித்துவிடலாம் என்று திட்டமிட்டனர். பசுமாடுகளை விடும்போது இரதத்தை இழுத்துக் கொண்டு, அவைகள் இயல்பாகவே தங்கள் கன்றுகளைத் தேடிப்போகும். பசுமாடுகள் பெத்-ஷிமேஷ் நோக்கிச் செல்லும் சாலையில் சென்றன என்றால் அது தங்கள் மத்தியில் அப்படிப்பட்ட துன்பத்தைத் தேவனே கொண்டுவந்தார் என்பதற்கு அடையாளமாக இருக்கும் என்று பெலிஸ்தர்கள் முன்தீர்மானித்தனர். அவைகள், அவ்வாறு செல்லவில்லை என்றால், தாங்கள் சபிக்கப்படவில்லை, ஆனால் தங்களின் துரதிஷ்டவசமான நிலை தற்செயலானதுதான் என்று அவர்கள் அறிந்திருப்பார்கள். பசுக்கள் நேராக பெத்-ஷீமோஷை நோக்கிச் சென்றன. அங்கிருந்து அந்த பேழையானது, கீரியாத்-யாரீம் என்ற இடத்தில் இருந்த அபினதாப் என்பவரின் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது, அங்கே அது இருபது ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்தது.

தாவீது அரசரானபோது, தேவனுடைய பிரசன்னத்திற்கான அவரது விருப்பமானது, தேவனுடைய பேழையை எருசலேமுக்குக் கொண்டு வரும்படி அவரைத் தூண்டியது. அவர் தமது சேனாதிபதிகள் மற்றும் தலைவர்களைக் கலந்து ஆலோசித்தார். பேழை எருசலேமுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர், ஏனெனில், அவர்கள் தேவன் நீண்டகாலமாகத் தமது நாமத்தை நிலை நாட்டியிருந்த இடத்தில் அவரை அணுகாது இருந்தனர். இருபது ஆண்டுகளுக்கு முன்பு பெலிஸ்தர்கள் செய்திருந்ததுபோலவே, இஸ்ரவேல் மக்களும் பேழையை ஒரு புதிய இரதத்தில் எடுத்து வைத்து, அந்த இரதத்தை ஊசா மற்றும் அகீயூ என்பவர்கள் ஓட்டிவரும்படி

செய்தனர். அவர்கள் அதை மிகப்பெரிய கொண்டாட்டமாக்கி, அவர்கள் சென்றபோது பாடல்கள் பாடி இசைக்கருவிகளை இசைத்தனர். அவர்கள் நாகோன் என்பவருடைய தூற்றுக்களத்திற்கு வந்துசேர்ந்தபோது, மாடுகள் தள்ளாடின. பேழையானது இரதத்தில் இருந்து விழப்போகிறதே என்ற நினைத்த ஊசா, பேழையை உறுதியாய் இரதத்தில் இருக்கச் செய் வதற்காகத் தமது கையைப் பேழையின்மீது வைத்தார். உடனடியாக, அவர் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார் (2 சாமுவேல் 6:1-10; 1 நாளாகமம் 13:1-10). 2 சாமுவேல் புத்தகத்தில் உள்ள விவரமானது "அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்" என்று கூறுகிறது (6:7).

இஸ்ரவேல் மக்கள் தங்கள் தளபதிகள் மற்றும் தலைவர்களைக் கலந்து ஆலோசித்திருந்தனர், ஆனால் தாவீதோ அல்லது அவருக்கு உதவியவர் களோ கர்த்தரிடத்தில் கலந்து ஆலோசிக்கவில்லை. முழு நிகழ்ச்சியும் பயபக்தியற்றதாக - அவர்கள் உண்மையற்றவர்களாக இருந்தார்கள் என்பதினிமித்தம் அல்ல, ஆனால் பேழையை எடுத்துச் செல்வதில் அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு நேரெதிராகச் செயல்பட்டதன் நிமித்தமே இவ்வாறு - இருந்தது. தாவீது கோபமும் பயமும் கொண்டார்; அவர் பேழையை எருசலேமுக்கு எவ்வாறு எடுத்துச் செல்வது என்று அறியா திருந்தார். அது மூன்று மாதம் அளவாக ஓபேத்-ஏதோம் என்பவருடைய வீட்டிலே இருந்தது.

தேவன் ஓபேத்-ஏதோமின் வீட்டை ஆசீர்வதித்திருந்தார் என்று தாவீது கேள்விப்பட்டபோது, அவர் பேழையை எருசலேமுக்குக் கொண்டு வரும் தமது முயற்சிகளைப் புதுப்பித்தார். இருப்பினும், இவ்வேளையில், அவர் பேழையைக் கொண்டுவரத் தகுதியான வகைமுறையை ஆராய்ந்து தேடினார் என்பது தெளிவு. முதன்முறை பேழையை ஆசாரியர்கள் சுமந்துவராதபடியால் அந்தத் துன்பம் வந்திருந்தது என்று அவர் உணர்ந்தறிந்தார் - ஏனென்றால் அவர்கள் பேழையை எவ்வாறு எடுத்துச் செல்ல வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதைத் தேவனிடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை (1 நாளாகமம் 15:13). அவர் லேவியர்கள் மாத்திரமே அதைச் சுமந்து செல்ல வேண்டும் என்று அறிந்தார், ஏனெனில் "தேவனுடைய பெட்டியை எடுக்கவும், என்றைக்கும் அவருக்குப் பணிவிடைசெய்யவும், அவர்களையே கர்த்தர் தெரிந்துகொண்டார்" (1 நாளாகமம் 15:2ஆ).

மீண்டுமாக, தாவீது இந்த நிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்கு இஸ்ரவேல் மக்களைக் கூடிவரச் செய்தார். இருப்பினும், இந்த வேளையில், அவர் தமக்கு உதவும்படி ஆரோனின் புத்திரர்களுடைய சந்ததியிலிருந்து 862 பேரை அழைத்தார். அவர் ஆசாரியர்களை அழைத்து, "லேவியரில் நீங்கள் பிதாக்களுடைய சந்ததிகளின் தலைவர், நீங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியை அதற்கு நான் ஆயத்தம்பண்ணின ஸ்தலத்திற்குக் கொண்டுவரும்படி, உங்களையும் உங்கள் சகோதரரையும் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (1 நாளாகமம் 15:12). இவ்வேளையில் பேழையைக் கொண்டுவருதல் வெற்றிகரமாக நிறை

வேறிற்று, ஏனென்றால் "கர்த்தருடைய வார்த்தையின்படியே, மோசே கற்பித்த பிரகாரம்" பேழையை லேவியின் புத்திரர்கள் தங்கள் தோள்களில் சுமந்து வந்தனர் (1 நாளாகமம் 15:15). நாம், தாவீதைப்போன்று, தேவனுடைய பிரசன்னத்தில் இருக்க ஆவல் கொண்டிருந்தால், தேவனுடைய அரியணையை நெருங்குவதற்குத் தாவீதின் உண்மையான ஆனால் தவறான வழிமுறைகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

## ஆராதனை என்பது தேவனை மையமாகக் கொண்டுள்ளது

தேவனே ஆராதனையின் கருப்பொருளாக இருக்கிறார் என்பதைப் பற்றி, வசனத்தைப் படிக்கும் எந்த மாணவரும் கேள்வி கேட்கமாட்டார். தேவனுக்கு மாத்திரமே நாம் "நம்முடைய துதியின் பலியாகிய," "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை" செலுத்த வேண்டும் (எபிரெயர் 13:15). ஆராதனை என்பது தேவனுடைய மக்களாக இருக்கிறோம் என்ற வகையில் நமது இன்றியமையாத பாகமாக உள்ளது. "உங்கள் விருப்பப்படியே வாழுங்கள்" என்ற தத்துவத்தினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டுள்ள உலகத்தில் வாழ்கிற மக்களுக்கு, அவரது அறிவுறுத்தலை நாடுதல் மிகவும் கடினமாயிருக்கக் கூடும். நாம் திரளான கூட்டத்தினரை ஈர்ப்பது எது மற்றும் அவர்களைத் திரும்பி வரச்செய்வது எது என்பவற்றின் அடிப்படையில் அதிகமாய்ச் சிந்திக்கச் சாய்கிறோம். திரளான கூட்டத்தினரைக் கொண்டிருத்தல் என்பது அதிக மன எழுச்சியான ஆராதனை அனுபவத்தை விளைவிக்கும் என்று நாம் முன்அனுமானம் செய்கிறோம். ஆராதனையை நடத்துபவர்கள், தேவனால் தங்களுக்குத் தரப்பட்ட தாலந்துகளைச் செயல்படுத்துவதற்கு அனுமதிப்பது எது என்ற அடிப்படையில் சிந்திக்கும்படி நாம் சோதிக்கப் படலாம். நாம் இவ்வாறு சிந்திக்கத் தொடங்கும்போது, ஆராதனையின் மையக்கருத்தைவிட்டு நாம் விலகிச் செல்கிறோம். நமது ஆராதனையின் மையக்கருத்தின்மீது கவனம் குவிப்பதை நாம் இழத்தல் என்பது ஆவிக்குரிய வகையில் பக்திவிருத்தியூட்டும் ஆராதனையை வெறுமையும் குறைவுள்ளதுமாக ஆக்குதலை விளைவிக்கிறது. இப்படிப்பட்ட ஆராதனை யானது ஆவியையல்ல மாம்சத்தையே பிரியப்படுத்துகிறது. தேவனுடைய பரிசுத்த தன்மைக்குப் பலியாக இருத்தல் என்பதைத் தவிர, மாம்ச விருப்பமானது தேவனுடைய அரியணைக்கு முன்பு எந்த இடத்தையும் கொண்டிருப்பதில்லை. நாம் ஆராதிக்கும்போது செய்கிறவைகள் நமது மாம்சத்திற்குப் பிரியமானவைகளாக இருந்தால், நாம் உண்மையில் ஆராதிக்கவில்லை என்றே அர்த்தமாகிறது. "சுயம் என்பது, அதன் எல்லா வடிவங்களிலும், எப்போதுமே தன்னில் தேவனுடைய பிரசன்னத்திற்கு ஒரு இடையூறாக இருப்பதையே நாடுகிறது."[4]

நவீனத்துவத்தின் குரலானது, மிகவும் அடிக்கடி தேவனுடைய குரலைவிட அதிகம் சத்தமுள்ளதாக இருக்கிறது. கலாச்சாரத்தின் வற்புறுத்துதல்கள் தேவனுடைய வற்புறுத்துதல்களைக் காட்டிலும்

*மேலானவைகளாக உள்ளன. டேவிட் வெல்ஸ் என்பவர் பின்வருமாறு கூறினார்,*

> *நவீனத்துவம் என்பது மதிப்பீடுகள் பற்றி ஒவ்வொரு நபரின் மனதிற்குள்ளாகவும் புகுந்து நிலைபெற்றுள்ள மனநிலையொன்றை முன்னிறுத்துகிறது. நவீனத்துவம் என்பது மனிதனின் பெரு விருப்பங்கள், சிந்திக்கும் செயல்முறை, மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றை மறுவுருவாக்கம் செய்ய தனது வல்லமையில் வரையறை யற்றதாக உள்ளது. இதை, வேதாகமரீதியான, சொற்றொடர்களில் கூறுவதென்றால், இது நமது காலத்தில் உள்ள உலகப்பிரகாரமான எண்ணம் ஆகும்.*[5]

*உண்மையான ஆராதனை என்பது ஆராதிப்பவரைத் திருப்திப்படுத்தி நிறைவுபெறச் செய்யும் வகையில் தேவனால் வடிவமைக்கப்பட்டிருக் கையில், சுய-நிறைவு என்ற கருத்தில் உள்ளார்ந்த பிரச்சனை ஒன்று இணைந்துள்ளது. "மனிதமையவியம்" என்பது இந்தப் பிரச்சனைக்கான இறையியல்ரீதியான சொற்றொடர் ஆகும். இந்த வார்த்தை, "மனிதனில் மையங்கொண்டது" என்று அர்த்தப்படுகிறது,*[6] *இது தேவன் கூறுவதைக் கவனிக்கக் கடினமான நேரத்தை நாம் கொண்டிருக்கும் பகுதியில், நம்மை நாம் மாம்சத்தில் மூழ்கடிக்க விரும்பும் பகுதியில் பிரதிபலிக்கிறது. மாம்சம் தேவனுடைய அரியணைக்கு முன்பாக நிறைவு எதையும் காண்பதில்லை.*

*தேவன் "நீதியினிமித்தம் பசிதாகமுள்ளவர்களை" (மத்தேயு 5:6) நிரப்புவதுபோல, ஆராதனை நடக்கும்போது, ஆராதிப்பவரின் பாத்திரத்தை நிரப்புகிறார். தேவனால் நிரப்பப்பட்டிருத்தல் என்பது, ஆராதனை என்ற பெயரில் ஒருவர் பொழுதுபோக்கிற்காகத் தமது சொந்த பெருவிருப்பங்களில் மூழ்கியிருத்தல் போன்றதல்ல. ஆராதனை என்பது மனித தேவைகளை சந்திக்க வேண்டும் மற்றும் அது சந்திக்கிறது, ஆனால் அது உடல்ரீதியான அல்லது உணர்வுரீதியான அனுபவங்களின் மேலோட்டமான அளவில் நடப்பதில்லை. உண்மையான ஆராதனை என்பது பங்கேற்பவர்களை உணர்வுரீதியாகப் பித்தம் கொள்ளும் நிலைக்குத் தூண்டுகிற ஒரு இசைக்கச்சேரியாகவோ அல்லது கேளிக்கை நிகழ்ச்சியாகவோ இருப்பதில்லை. மாறாக, அது நமது இரட்சகரும் தேவனுமாக இருப்பவருக்கு மகிமையும் கனமும் அளிப்பதற்காக ஆவியால் நிறைந்த துதிகளை உடையதாக, அதன் விளைவாக ஆராதிப்பவரைத் தேவனுடைய வல்லமை மற்றும் பிரசன்னத்தினால் நிரப்புவதாக உள்ளது. ஆராதனை என்பது சுயத்தையும் தனிப்பட்ட பெருவிருப்பங்களையும் மேன்மைப்படுத்துவதல்ல, ஆனால் சுயத்தை விட்டுவிடுதலாக உள்ளது. அது ஒருவர் தமது தகுதி மற்றும் மேன்மை ஆகியவற்றை மேம்படுத்துதல் பற்றியதாயிராமல், தேவன் ஒருவரே துதிக்கும் மேன்மைக்கும் பாத்திரர் என்பதை ஒப்புக்கொள்ளுதல் பற்றியதாக உள்ளது.*

*தேவன் நமது அக்கறையின் மையமாகிறபோது, நாம் தேவனுடைய அக்கறையின் மையமாகிறோம். நம்மையே நாம் தாழ்த்தும்போது, அவர் நம்மை உயர்த்துவார் (யாக்கோபு 4:10). தேவன் நமக்கு நற்காரியங்கள்*

நடக்கச் செய்வார் என்பதற்காக நாம் அவரை ஆராதிப்பதில்லை, அல்லது நமது ஆராதனையானது, நமக்கு "மோசமான" எதுவும் நடக்காதபடி காத்துக்கொள்ள அவரைக் கட்டுப்பாடு உடையவராக்குவதும் இல்லை. தேவன் தேவனாக இருப்பதால் நாம் அவரை ஆராதிக்கிறோம்.

வென்டெல் வில்ஸ் என்பவர், ஆராதனை மூன்று படிநிலைகளில் நடக்கிறதென்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.[7] முதல் படிநிலையை, அவர் "ரசனை அனுபவம்" என்று அழைத்தார், இது பயபக்தியின் உணர்வாக உள்ளது. இந்தப் படிநிலைகளில் நாம் சுயத்தை வெறுத்து தேவன் தமது வழியைக் கொண்டிருக்க அனுமதிப்பதைக் கடினமானதாகக் காண்கிறோம். இவ்வகையான ஆராதனை நல்லதாக உணரப்படுகிறது; இது அழகு மற்றும் மேன்மை பற்றிய நமது தனிப்பட்ட உணர்வுகளுக்கு ஏற்றதாக உள்ளது. இரண்டாவது படிநிலையை, வில்லிஸ் "ஒழுக்கரீதியான படிநிலை" என்று அழைத்தார். இந்தப் படிநிலையில் தேவனைப் பற்றிய நமது பாராட்டுதலானது நம்மை துடிப்புள்ள பதில்செயல் செய்யும்படி இயக்குகிறது. வில்லிஸ் அவர்களால் விவரிக்கப்பட்ட மூன்றாம் படிநிலை "மத ரீதியானது" என்பதாக உள்ளது. இந்தப் படிநிலையில், நாம் தேவன் தம்மையும் நமக்காக அவர் கொண்டுள்ள தமது நோக்கங்களையும் வெளிப்படுத்த தேவன் முதன்முயற்சி மேற்கொண்டுள்ளார் என்று அறிகிறோம். அந்த உணர்ந்தறிதல், அவரது மதிப்பை ஒப்புக்கொள்ளும் பதில்செயலை வேண்டிக் கேட்கிறது. அப்படிப்பட்ட உணர்ந்தறிதல், தேவன் கூறுபவற்றை உற்றுக்கவனிப்பதாலும் அவரது வசனத்திற்கு இசைந்தவாறு பதில்செயல் செய்வதாலும் மாத்திரமே வரமுடியும்.

## முடிவுரை

வேதாகமம் என்பது காலாவதியானது என்றும் கலாச்சாரத்திற்கு ஏற்புடையதல்ல என்றும் சில மக்கள் கருதினாலும், தேவனுடைய வசனமே ஆராதனையில் நமது நடக்கையின்மீது அதிகாரத்துவம் உடையதாக நிலைத்திருக்க வேண்டும். நமது கலாச்சார சூழ்நிலை அல்லது வெகுஜனக் கருத்து என்பது என்னவாக இருப்பினும், அவரது வசனமே நமது நடக்கைக்குக் கட்டளையிட வேண்டும். ஆராதனை என்பது ஆராதிப்பவரை மேலே எழுப்புவதாகவும் அவருக்குப் பக்திவிருத்தியூட்டுவதாகவும் இருக்க வேண்டும். (1 கொரிந்தியர் 14:3-5, 12, 17, 26, 31 ஆகிய வசனங்களை மறுகண்ணோட்டமிடவும்.) இருப்பினும், கர்த்தருக்குள் பாதுகாப்பாக இருக்கிற விசுவாசிகளுக்கு, தங்களை மேலே எழுப்புவதாக உள்ள ஆராதனையானது தேவனை அறியாத மக்களுக்கு அலுப்புள்ளதும் பொருத்தமற்றதாகவும் காணப்படலாம். தேவனுடைய மக்கள் தேவனை மையங்கொண்ட, வசனத்தினால்-இயக்கப்படுகிற ஆராதனையைத் தங்களின் வாழ்வினுடைய மையமாக வைக்கிறபோது, அவரது ஆசீர்வாதங்கள் அவர்களின் நடுவில் பொழியப்படும். அவிசுவாசிகளை அல்லது விலகித்திரியும் விசுவாசிகளை தேவனுடைய பிரசன்னத்திற்கு உண்மையாகவே இழுக்கக்கூடிய ஒன்று உள்ளதென்றால், அது இந்த நிகழ்ச்சி நடப்பதைக் காணுதல் என்பதேயாகும். சபைகூடுதலில்

*உள்ள அவிசுவாசிகள் வசனத்தினால் குற்றம் உணர்த்தப்பட்டு தேவன் நிச்சயமாகவே நமது மத்தியில் இருக்கிறார் என்பதை அறிவார்கள் என்பது, ஆராதனை தேவனை-மையமாகக் கொண்டதாகவும் அவரது வசனத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு காரணமாக இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 14:24, 25).*

*ரான் கார்ல்ஸ்ன் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட பின்வரும் கூற்று, இந்தப் பாடத்தின் சிந்தனையைப் போதுமான அளவுக்குத் தொகுத்துரைக்கிறது: "நாம் கிறிஸ்தவக் கலாச்சாரத்தையும், தற்காலப் போக்கினைத் தாண்டும் வழிமுறைகளையும் பராமரிக்க வேண்டுமென்றால், நாம் தேவனுடைய வசனத்தின்மீது கவனம்குவிக்க வேண்டும் … ."*[8]

---

குறிப்புகள்

[1]Alfred P. Gibbs, *Worship: The Christian's Highest Occupation*, 2d ed. (Kansas City, Kans.: Walterick Publishers, n.d.), 19-25. [2]F. Meyrick, in *The Pulpit Commentary*, vol. 2, *Leviticus and Numbers*, ed. H. D. M. Spence, and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 149. [3]Aubrey Johnson, *Music Matters in the Lord's Church* (Nashville: 20th Century Christian, 1995), 15. [4]Gibbs, 216. [5]David F. Wells, *God in the Wasteland: The Reality of Truth in a World of Fading Dreams* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1994), 29. [6]Jack Hayford, *Worship His Majesty* (Dallas: Word Publishing, 1987), 47. [7]Wendell Willis, *Worship*, The Living Word Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1973), 5-6. [8]Ron Carlson, *Comatose Christianity: A Wake-up Call for Christians* (Nashville: Christian Communications, 1989), 5.